# காலம் வரும்!

''செலாவணி மோசடிகளில் ஈடுபட்டமைக்காக ஒ வர், அவரது மகன், மருமகன் ஆகியோர் தண்டிக்கப்பட்டிருப்பதாக பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன. ஆனுல், என்ருே ஒருநாள் எதிர்காலத்தில் பிரதமர் சிறிமாவோ, மகன், மருமகன், மநதிரி பீலிக்ஸ், மனைவி, மைத்துனி, மைத்துனர், ஆகியோர் நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டிருப்பதாக பத்திரிகைகளில் செய்திகள் நிச்சயம் வெளிவந்தே தீரும்''

—தேசிய பேரவையில் பிரின்ஸ் குணசேகரா.


சுதந்திரன்

SUTANTIRAN

★ விஸ் சதம் 35. வ.ஆ. 2007, மாசி 13, ஸபர் 24, (25-2-76) புதன் புத்தகம் 29, இதழ் 37


# 2000 ஆண்டுகளாக தனித்துவத்துடன் வாழ்ந்தவர்கள் ஈழத் தமிழர்!

## அவர்களது அபிலாஷைகளுக்கு இணங்கினுல் இலங்கை அரசை உலகம் மதிக்கும்!

### 'இலண்டன் டைம்ஸ்' ஏட்டில் பிரிட்டிஷ் குடிமக்கள் கட்டுரை!

''சிறிலங்கா அரசுக்கு அதன் வேலையென்ன என்பதைச் சொல்வதல்ல எங்கள் நோக்கம். ஆனுல், கனடா, ஐக்கிய இராச்சியம் போன்ற காமன்வெல்த் நாடுகளைப் பின்பற்றி, ஈழத் தமிழர்களின் அபிலாசைகளை சிறீலங்கா அரசு நிறைவேற்றிவைக்குமானுல் உலகநாடுகளின் மதிப்பையும் மரியாதையையும் அது சம்பாதித்துக்கொள்ளும் என்பதை மட்டும் உறுதியாகக் கூறிவைக்கிருேம்.''

—இவ்வாறு இங்கிலாந்துக் குடிமக்கள் நால்வர் அண்மையில் ''இலண்டன் டைம்ஸ்'' ஏட்டில் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஜோன் போஸ்டர் கியு. சி., டேவிட் அஸ்ரர், றேபேட் பேர்லி, ஜி. மைக்கல் ஸ்கொட் ஆகிய நான்கு பிரபல பிரிட்டிஷ் குடிமக்களே இவ்வாறு கருத்துத் தெரிவித்தோராவர்.

இலங்கைத் தமிழர்கள் இலங்கையின் வடக்குப் பகுதியில் சுமார் 2000 ஆண்டுகட்கு மேலாக தனித்துவத்துடன் வாழ்ந்துவந்துள்ளனர் என்றும் அவர்கள் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளனர்.

# சர்வாதிகாரத்தை எதிர்த்து 20 இலட்சம் பேர் வேலைநிறுத்தம்!

அவசரகாலச் சட்டத்தைப்பயன்படுத்தி தொழிற்சங்க உரிமைகளை நசுக்கும் அரசின் சர்வாதிகாரத்தை எதிர்த்து கட்சி, அரசியல், இன, மொழிவேறுபாடின்றி சுமார் 20 இலட்சம் தொழிலாளர்கள் கடந்த 20-2-76 வெள்ளிக்கிழமையன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்!

19-2-76 வியாழன் நள்ளிரவு முதல், 20-2-76 வெள்ளி நள்ளிரவுவரை நடைபெற்ற இந்த அடையான வேலை நிறுத்தத்தின் போது அரசாங்க செயலகங்கள் அனைத்தும் ஸ்தம்பித்தன. இ.போ.ச. புகையிரதசேவை, துறைமுகம் போன்றவற்றில்வேலை நிறுத்தம் நூறுவீதம்வெற்றி பெற்றது. அரசாங்கம், எதிர்க்கட்சி என்ற வேறுபாடின்றி சகலதொழிற் சங்கங்களும் இவ்வேலை நிறுத்தத்தில் பங்குபற்றின. அரசாங்க அச்சகவேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களை நசுக்க முயலும் அரசின் சர்வாதிகார நடவடிக்கைகளை கண்டித்தே இவ்வேலை நிறுத்தம் நடைபெற்றது.

இவ்வேலை நிறுத்தத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் உட்பட தமிழ்மொழி வழித்தொழிற் சங்கங்களும் பங்குபற்றின. மத்திய வங்கித் தமிழ் ஊழியர் மன்றமும் பங்கு பற்றியது.

அரசு தனது சர்வாதிகாரப்போக்கை கைவிடாவிடின், வேலை நிறுத்தம் மீண்டும் தொடரும் என்று தெரிகிறது.

# தமிழரசுக் கட்சியினரிடம் மன்னிப்புக்கோரினுர்பீலிக்ஸ்

தன்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்குப் பதிலிறுத்து தேசிய அரசுப்பேரவையில் ஓர் அறிக்கையை சமர்ப்பித்த நிதியமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா, அந்த அறிக்கையை தமிழில் வெளியிடமுடியா மற்போனதற்கு தமிழரசுக்கட்சியினரிடம் மன்னிப்புக்கோரினுர்.

இந்நிகழ்ச்சியை 21-2-76 தினகரன் வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:-

''திரு. பண்டாரநாயகா தமது பேச்சை ஆரம்பித்த போது கூறியதாவது:- எந்தப் பிரச்சினையையும் தட்டிக்கழிப்பது எனது நோக்கமல்ல. எழுப்பப்பட்ட பிரச்சினைகள், கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கும் அறிக்கையொன்றை அச்சுப் பதித்து இங்கு விநியோகிக்கத் தயாராக வந்திருக்கிறேன். ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் இவை அச்சாகியுள்ளன. தமிழில்வெளியிடாததற்கு தமிழரசுக் கட்சியினரிடம் மன்னிப்புக் கோருகிறேன்!

ஜனுப் அசீஸ்:- எதற்காக அவர்களிடம் மாத்திரம்?

பீலிக்ஸ்:- ''அவர்கள் தான் எல்லாம் தமிழில் இருக்கவேண்டுமென்று கோருபவர்கள். அதனுல்தான் அப்படிக்கோரினேன்''

# மாணவர்கள் பகிஷ்கரித்தனர்!

மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை (16—2—76) மாலை நடைபெற்ற ஆய்வுகூட கட்டடத்திறப்பு விழாவை அக்கல்லூரியின் உயர்வகுப்பு மாணவர்கள் பகிஷ்கரித்தனர். இவ்விழாவுக்கு மட்டக்களப்பு இரண்டாவது பா. உ. வும் அரசியல் அதிகாரியுமான திரு. பீ. ஆர். செல்வநாயகம் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டதை ஆட்சேபித்தே அவர்கள் இந்தப்பகிஷ்கரிப்பை நடத்தினர். பகிஷ்கரிப்பு சம்பந்தமாக துண்டுப்பிரசுரம் ஒன்றையும் இம் மாணவர்கள் வெளியிட்டிருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டில் மீண்டும் தி. மு. க. ஆட்சியே வரும்!

ஆசிரியருக்கு:

## இந்திரா காந்தி கூற்றின் உள்நோக்கம் என்ன?

திருமதி இந்திரா காந்தி அம்மையார் கடந்த ஞாயிறு இரவு சென்னை மெரீனா கடற்கரைக் கூட்டத்தில் உரையாற்றினார். இவ்வுரையை இந்திய வானொலி அஞ்சல் செய்தது. அம்மையாரின் உரையில் பல புதிய குற்றச் சாட்டுக்களை தி. மு. க. அரசின் மேல் சுமத்தியதை அவதானிக்கமுடிந்தது.

"தி. மு. க. அரசைப்பதவியிலிருந்து அகற்றியமைக்குக் கூறப்பட்ட காரணங்கள் போதுமானவையல்ல. ஆகவே மேலும் புதிய குற்றச்சாட்டுக்களைச் சேகரிக்கிறார்களா?" என்ற ஆராய்ச்சி எமக்குவேண்டியதில்லை. ஆனால் அம்மையார் கூறிய ஒரு விடயம் வருத்தத்தை அளிக்கிறது.

"அண்டை நாடான ஸ்ரீ லங்காவுடன் உறவை விருத்தி செய்துகொள்வதற்கு தி. மு. க. அரசு ஒரு தடையாக இருந்தது!" என்ற பொருளில் அம்மையார் புத்தம் புதிய குற்றச் சாட்டொன்றைச் சுமத்தியுள்ளார்கள். எவ்விதத்தில தி. மு. க. அரசு தடையாக இருந்ததென்பதை அவர் விளக்கவில்லை. தமிழ் மக்கள் நிறைந்துள்ள அக்கூட்டத்தில் அத் 'தடை'யை விளக்குவது தமக்குப்பாதகமாக அமையலாமென அம்மையார் கருதியிருக்கலாம்.

மொழிப் பிரச்சினையாலும் வேறு பல இன்னல்களினாலும் நலிந்துபோயிருக்கும் ஈழத்தமிழர்கள் பால தி.மு.க. அரசு அக்கறையையும் அனுதாபத்தையும் காண்பித்தது உண்மையே. அம்மையாரின் தந்தையார் மனிதருள் மாணிக்கம் எனப் போற்றப்படுகிறநேரு அவர்கள் எத்தனையோ சந்தர்ப்பங்களில் அடக்கப்பட்டவர்கள் ஒடுக்கப்பட்டவர்கள் சார்பாக அவர்கள் எந்த மூலையில் இருந்தாலும் உரிமைக்குரல் எழுப்பியதை அம்மையார் மறந்திருக்க முடியாது. மனிதப் பண்பின் அடிப்படையில், மனித உணர்ச்சியின் உந்துதலில் தி. மு. க. ஈழத்தமிழர்கள் பால் அக்கறையையும் அனுதாபத்தையும் காட்டியது. இதனைத்தான் அம்மையார் 'உறவு விருத்திக்குத் தடை' என்கிறாரா?

புதிய புதிய குற்றங்களைக் கண்டு பிடித்து அதை தி.மு.கவின் மேல் சுமத்திவிட வேண்டுமென்ற வேகத்தில் இந்திரா அம்மையார் இந்தப் "பழி"யையும் கூறியிருக்கிறார் என நாம் கருத முடியவில்லை. ஏனெனில் அம்மையார் பண்பு நிறைந்தவர். தந்தையாரின் நிழலில் வளர்ந்தவர். பின்னர் யாரைத் திருப்திப்படுத்த இந்தக் குற்றச்சாட்டை தி. மு. க.வின் மேல் சுமத்துகிறார் என்பது புரியவில்லை.

செ. நடராச
அகலவத்தை

## 'ஆன்லுக்கர்' ஏட்டுக்கு கருணாநிதி அளித்த பேட்டி!

**தமிழ்நாட்டில் மீண்டும் தி. மு. கழக ஆட்சியே வரும் என்று தி. மு. கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் 'ஆன்லுக்கர்' என்ற ஆங்கில ஏட்டுக்கு அளித்த பேட்டியொன்றில் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.**

அப்பேட்டி விபரம் பின்வருமாறு:-

கே: எழுத்தாளர் என்ற முறையில் தங்களைக் கவர்ந்தவை எவை என்று சொல்வீர்களா? நீங்கள் விரும்பும் எழுத்தாளர் யார்?

ப: பகுத்தறிவுக் கொள்கையிலிருந்து பிறந்த கருத்துக்கள் மட்டுமே என்னை ஆட்கொண்டிருக்கிறது. சார்லஸ் டிக்கன்ஸ் போன்ற எழுத்தாளர்களின் படைப்புகளைப்பெரிதும் போற்றுகிறேன். சமுதாய நிலையைப் படம் பிடித்துக் காட்டும் அவரது நாவல்கள் மேலும் முன்னேற்றமான சமுதாயத்திற்கு வழி காட்டுவதாக உள்ளன. ஷேக்ஸ்பியரின் ஆழ்ந்த இலக்கியக் கற்பனையும் என்னை ஈர்த்துள்ளது. சாமர்செட் மாம், மாக்ஸிம் கார்க்கி ஆகியோரின் நாவல்களில் உள்ளத்தைப் பறிகொடுத்திருக்கிறேன்.

கே: தனது கொள்கைகளைப் பரப்புவதற்காக சினிமா, நாடகம் ஆகியவற்றை தி. மு. க. வெற்றிகரமாகப் பயன்படுத்தி வருகிறது. எழுத்தாளர் என்ற வகையில் தங்களைப் பற்றி என்ன மதிப்பீடு செய்கிறீர்கள்? பிரசாரத்தில் கைதேர்ந்தவராகவும் இருக்கிறீர்கள் அல்லவா?

ப: ஒவ்வொரு இலக்கியமும் ஏதேனும் ஒரு வழியில், சில குறிப்பிட்ட கொள்கைகளைப் பரப்புகிறது. ராமாயணம் குறிப்பிட்ட ஒரு மதத்தின் அல்லது கடவுளைப் பற்றிய பிரசார நூலேயாகும். அதைப்போலவே, எங்களது கருத்துக்களைப்பரப்ப இலக்கியம், நாடகம் அல்லது சினிமாவை நாங்கள் பயன்படுத்தும்போது, விளம்பரம் என்று குறை கூறக் கூடாது.

கே: தமிழ் இலக்கியத்தில் அண்ணாவின் பங்கு என்ன? அவரது எழுத்துக்கள் நீடித்து நிற்கக் கூடியவை அல்ல என்று சில விமரிசகர்கள் கருதுகிறார்களே?

ப: அண்ணாவின் "நீதிதேவன் மயக்கம்" ராமாயணத்தைப் போன்று நிலைத்து இருக்கும். ராவணன் இரக்கமிலா அரக்கன் என்று ராமாயணம் கூறுகிறது. இந்தத் தவறான வாதத்தைத் தகர்ப்பதற்காக அத்தகைய மிகச்சிறந்த நாடகத்தை அண்ணா உருவாக்கினார். அதைப் போலவே, 'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' அல்லது "சந்திர மோகன்" ஆகியவையும் தொடர்ந்து இருக்கும்.

கே: தங்களது கட்சி எப்போதும் கலப்புத்திருமணங்களை (சுயமரியாதைத் திருமணம் என்று சிறப்பாக அழைக்கப்படுகிறது) ஆதரித்து வருகிறது. கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கிறீர்களா? அதில் பிராமணர்களுக்கும் இடம் உண்டா?

ப: எங்களது அரசு குறிப்பிட்டுள்ளபடி பார்த்தால், ஐயர் ஒருவர் ஐயங்கார் குடும்பத்தில் உள்ளவரை மணந்து கொள்வது கலப்பு திருமணமாகாது.

ஐயரோ அல்லது செட்டியாரோ தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தபெண்ணை மணந்துகொண்டல், அது கலப்புத்திருமணம் எனலாம். எனது மகனுக்குக் கூட, தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்த பெண்ணையே மணம் செய்வித்திருக்கிறேன்.

கே: காந்தீயம் இன்று எந்த அளவுக்கு ஏற்றதாக உள்ளது?

ப: பொருளாதாரவளர்ச்சி கிராமங்களிலிருந்து தான் துவங்கவேண்டும் என்ற காந்தியக் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அவை படிப்படியாக எவ்வாறு நிறைவேறுகிறது என்பதைக் கண்கூடாக நாம் பார்க்கமுடியாது.

கே: தங்களது மொழிக் கொள்கை என்ன? ஆங்கிலம் வெறும் நூலக மொழிதானா? ஆங்கிலத்திற்கு ஆதரவு காட்டும் ஒரு சில கட்சிகளில் தங்களுடையதும் ஒன்றா?

ப: இந்தியாவில் உள்ள 14 மொழிகளும் தேசிய மொழிகளாக ஆகும் நாளை நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதுவரையில் ஆங்கிலம் நீடிக்கத்தான் வேண்டும்.

கே: பெரும் வர்த்தக நிறுவனங்கள் பத்திரிகைகள் நடத்துவதை நிறுத்தவேண்டும் என்பதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: பத்திரிகைகளைக் கட்டுப்படுத்துவது இயலாத ஒன்று. பத்திரிகைத்தொழிலை தேசியமயமாக்குவதை, சரியானதொரு தீர்வாக நாங்கள் ஏற்கவில்லை. பத்திரிகை மூலமாக இல்லாமல், எங்களைப்பொறுத்தவரை அதிக அளவில் மக்களிடம நேரடித் தொடர்பு கொள்கிறோம். இருப்பினும், பத்திரிகைகளை ஒதுக்கிவிட முடியாது. 'ஹிந்து' பத்திரிகையின் சார்பில் நடந்த ஒரு விழாவில் நான் கலந்துகொண்டு பேசும்போது, "இந்தப் பத்திரிகையில் தி. மு. கழகத்தைப் பற்றிய செய்தியைக் காண்பது, மணல்வெளியில் வைரங்களைத் தேடுவது போல் இருக்கிறது" என்று குறிப்பிட்டேன். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் எல்லாப் பத்திரிகைகளின் எதிர்ப்புகளையும் தாண்டித்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம்.

கே: மீண்டும் மதுவிலக்கைக் கொண்டு வந்ததும், குதிரைப்பந்தயத்தை ஒழித்ததும் ஒரே காரணத்தில் தானா?

ப: நாங்கள் மதுவிலக்கை ஒத்தி வைத்தோமே தவிர, அதை நீக்கிவிடவில்லை. தமிழ் நாட்டில் நிலவிய நிதிநெருக்கடி காரணமாகவே, மதுவிலக்கை ஒத்தி வைத்தோம் மீண்டும் மதுவிலக்கை அமுலாக்கியிருப்பது, அக்கொள்கை மீதுள்ள எங்கள் நம்பிக்கையைச் சுட்டிக் காட்டுகிறது. குதிரைப்பந்தய ஒழிப்பு குறித்து எங்கள் கட்சியின் தேர்தல் பிரகடனத்திலேயே குறிப்பிட்டிருக்கிறோம். அதைத்தான் செயல்படுத்தினோம்.

கே: இப்போதும் நீங்கள் எழுதுவது உண்டா?

ப: அரசியல் பிரச்சினைகள் பற்றி, பத்திரிகைகளில் கடிதம் எழுதுவது உண்டு. பழந்தமிழ வரலாற்றை அடிப்படையாகக்கொண்ட "ரோமாபுரிப் பாண்டியன்" என்ற எனது நாவல், இங்குள்ள ஒரு வார ஏட்டில் தொடர்ந்து வந்தது. சில மாதங்களுக்கு முன்பு, அது புத்தகமாகவும் வெளியிடப்பட்டது. எனது சுயசரிதம், உண்மையில் அது எங்களது இயக்கத்தின் வரலாறு(நெஞ்சுக்கு நீதி), சமீபத்தில வெளியானது. கவியரங்குகளிலும் நான் அடிக்கடி கலந்துகொள்வதுண்டு.

கே: உண்மையான ஜனநாயகம் என்பது மக்கள் ஜனநாயகம் அல்ல என்று சிலர் கருதுகின்றனர். அது பற்றிய தங்கள் கருத்து என்ன?

ப: பொதுவாக, மக்கள் ஜனநாயகமும், பாராளுமன்ற ஜனநாயகமும், ஒரே பொருள் கொண்டவைதான். ஆனால். அதற்காக ஜனநாயக என்ற பெயரில் பாராளுமன்றத்தில



சர்வாதிகாரத்தை நான் ஏற்க மாட்டேன்.

கே: பாராளுமன்ற முறை ஜனநாயகம் நமக்கு அன்னியமானதல்லவா?

ப: சமீபத்தில், செங்கல்பட்டு மாவட்டத்தில் தோண்டியெடுக்கப்பட்ட செப்பேடுகள் வாயிலாக, சோழர், பல்லவர் காலத்தில் 'குடவோலை' எனப்படும் மக்களின் தேர்தல் முறை இருந்தது உறுதிப்படுத்துகிறது.

கே: மீண்டும் தாங்கள் ஆட்சியமைப்பதற்கான வாய்ப்புகள் எப்படி இருக்கின்றன?

ப: தமிழ் நாட்டில் மீண்டும் எங்களது ஆட்சி அமையும் என்பதில், நான் சிறிதும் சந்தேகப்படவில்லை.

## 'ஊழல் மன்னன்' பாரூக் மரைக்காருக்கு இந்திரா காங்கிரஸில் இடம் கிடைத்தது!

'ஊழல் மன்னன்' என்று எதிர்க்கட்சியினரால்குற்றம் சுமத்தப்பட்ட பாண்டிச்சேரியின் முன்னாள் முதலமைச்சர் பாரூக் மரைக்காயரை இந்திரா காங்கிரஸ் சிவப்புக் கம்பளம் விரித்துவரவேற்றிருக்கிறது. இந்திரா காங்கிரசில் 'ஊழல் மன்னன்' மரைக்கார் சேர்த்துக்கொள்ளப்பட்டுவிட்டார். இவர் மீது விசாரணை நடத்தவேண்டுமென்ற கோரிக்கை புறக்கணிக்கப்பட்டுவிட்டது. பாண்டிச்சேரியிலுள்ள இந்திரா காங்கிரசினரும் பாரூக் மீது விசாரணை நடத்தவேண்டுமென இந்திராவிடம் கோரியிருந்தனர்.

ஊழல்' என்று கூறி தமிழ் நாட்டில் தி.மு.க அரசைக் கலைத்த இந்திரா காங்கிரஸ், பாண்டிச்சேரியில் ஊழல் மன்னன் பாரூக்கை தன்னுடன் இணைத்துக்கொண்டு விட்டது. பாண்டிச்சேரிக்கு ஒரு நியாயம் — தமிழ் நாட்டுக்கு மற்றோர் நியாயமா என்ற கேள்வி இதன்மூலம் எழுந்துள்ளது.

## ஜனநாயகத்தைப் பற்றி இந்திராகாந்தி!

மக்கள் முன் தம் கருத்தை வைக்க மக்களிடம் தத்தம் கருத்தை எடுத்துச் சொல்ல ஜனநாயகம் எல்லோருக்கும் உரிமை தந்திருக்கிறது. இந்த உரிமை எதிர்க்கட்சிகளுக்கும் உண்டு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறிய சுதந்திர நாடுகள்-6.

## சான் மறினோ

ஆக 22½ சதுர மைல் விஸ்தீரணமுள்ள இத்தாலியைச் சேர்ந்த சுதந்திரக் குடியரசு சான் மறினோ. பெரும்பாலும் இது நமது வேலணைத் தீவின் விஸ்தீரணத்தைப் போன்றது. 17000 மக்களைக் கொண்ட நாடாகும்.

இத்தாலியுடன் நட்புரிமை ஒப்பந்தம் கொண்டது. இத்தாலியின் நாணயங்களைப் பாவிப்பதுடன் சொந்த நாணயங்களையும் பாவிப்பார்கள். தங்களுக்கென்றே படை, தேசியக் கொடி, தபால் தலை உண்டு.

வயின், கம்பளிப் பொருட்கள், மட்பாண்டம் முதலியவற்றால் இந்நாட்டுக்கு வருமானம் கிடைக்கிறது.

## கதிரைவேற்பிள்ளை நினைவு தினக் கட்டுரை போட்டி!

சாதவதானி கதிரைவேற்பிள்ளையின் நினைவாக சிறுகதை, கட்டுரைப்போட்டிகளை சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் ஏற்பாடுசெய்துள்ளது. இதில் முதற்பரிசாக தங்கப் பதக்கம் வழங்கப்படவுள்ளது. முடிவு திகதி 15-3-76 மேலும் விபரங்களைபொதுச் செயலாளர் சதாவதானி கதிரைவேற்பிள்ளை சன சமூக நிலையம், சதாவதானி கதிரைவேற்பிள்ளை வீதி, தபபசிட்டி. பருத்தித்துறை எனும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## மாமனின் வரலாறு மருமகனுக்குத் தெரியாதா?

திருமதி பண்டாரநாயகாவின் மருமகன் ருபசிங்காவின் தமிழ்ப்பத்திரிகை தனது 14 2.76 இதழில் மலைநாட்டுத் தமிழர்களின் பிரஜாவுரிமையைப் பறிக்கும் சட்டங்களை கொண்டுவந்தவர் காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயகா தான் என்று சாடியிருக்கிறது.

உண்மைதான், நாம் அதை மறுக்கவில்லை.

இந்த அநியாயச் சட்டங்களை எதிர்த்து பாராளுமன்றத்தில் அன்று வாதிட்டு நின்றவர் தந்தை செல்வா அவர்கள்தான் என்பதை உலகம் அறியும்!

ஆனால், 1948ம் ஆண்டு இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டங்கள் கொண்டு வரப்பட்ட நேரத்தில்—அச்சட்டங்களை கொண்டு வந்து ஆதரித்து நிறைவேற்றியவர்கள்—

யூ. என். பி.யினர் மாத்திரமல்ல—

அப்போது யூ. என். பி.யிலிருந்தவரும் உள்ளூராட்சிஅமைச்சர் பதவியிலிருந்தவருமான ருபசிங்காவின் மாமன் காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவும் இச்சட்டங்களை ஆதரித்து வாக்களித்து நிறைவேற்றி வைத்தார்!

இது கடந்த கால வரலாறு கூறும் உண்மை!

மலைநாட்டுத் தமிழர் வாக்குரிமை குடியுரிமையைப் பறித்தவர் டி. எஸ். சேனநாயகா மாத்திரமல்ல — ருபசிங்காவின் மாமா எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவும்தான்.

இந்த உண்மையை ருபசிங்காவின் பத்திரிகை புரிந்துகொள்ளட்டும்! —எரியீட்டி.

## பாடசாலையின்றி தமிழ்பேசும் மக்கள் அவதி!

மத்துகம பகுதியில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் தங்களது பிள்ளைகளுக்கு கல்வியறிவூட்ட பாடசாலையின்றி தவிக்கின்றனர். இங்கு வாழும் மக்கள் (தமிழ், முஸ்லிம்) தங்கள் பிள்ளைகளுக்கு படிப்பறிவூட்ட வேண்டுமாயின்—மத்துகமை நகருக்குத்தான் அனுப்ப வேண்டும். இங்கு இரண்டு அரசாங்க பகுதிநேர பாடசாலைகள் தான் இயங்குகின்றன. இவ்விரண்டு பாடசாலைகளுக்கும் தமிழ் மாணவர்கள் சேர்க்கப்படுவதாய் இருந்தால், இந்தப்பகுதி ஆளுங்கட்சி பா. உ. வைத்தான் நாட வேண்டும். அவர் உத்தரவு கொடுத்தால்தான் இங்கு தமிழ் மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள்.

இப்பொழுது மத்திய மகா வித்தியாலயத்தில் புது தமிழ் மாணவர்கள் முற்றாகவே சேர்க்கப்படுவதில்லை. 2ம், 3ம் வகுப்புக்கள் இங்கு இயங்கவில்லை. இந்த வகுப்புகளுக்காவது மாணவர்கள் சேர்க்கப்படுவதில்லை. இது இப்படி இயங்கும்போது இன்னும் ஆறே வருடங்களில் தமிழ்ப்பிரிவே இந்த பாடசாலையில் இல்லா தொழிந்துவிடும் அபாயம் தோன்றியுள்ளது.

இந்தப் பகுதி தோட்டப் பாடசாலைகளில் 5ம் வகுப்பு வரைதான் போதிக்கப்படுகின்றன. தோட்டப் பாடசாலைக்கு தமிழ் ஆசிரியர்கள் சரியாக நியமிக்கப்படுவதில்லை. அப்படி நியமிக்கப்பட்ட ஆசிரியர்களும் பாடசாலைக்கு ஒழுங்காக வந்து போவதில்லை. இதனால் இங்கு வாழும் தமிழரும், முஸ்லிம்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றார்கள்.

## பொத்துவிலில் சிவராத்திரி விழா

பொத்துவில் இந்து இளைஞர் பேரவையினர் 28 2.76மாலை பொத்துவிலில் ஏற்பாடு செய்துள்ள சிவராத்திரி விழாவில் திருவாளர்கள். கோவை மகேசன் ஈழவேந்தன், ரகுபதி பாலசிறீதரன் ஆகியோர் கலந்துகொண்டு, முறையே "நாமார்க்கும் குடியல்லோம்" — "நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்" "பொய்மையாளரைப் பாடாத" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றுவர். இவ்விழாவுக்கு திரு. சண்முகநாதன் தலைமை தாங்குவார்.

## குருநாகலில் கருத்தரங்கு

தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையின் ஆதரவில் 21-2-76 சனிக்கிழமை குருநாகல், நாரமுல, ஆகிய இடங்களில் தமிழ் இளைஞர்களின் கருத்தரங்குகள் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. ஏராளமான இளைஞர்கள் இதில் பங்குபற்றினர். தமிழேந்தல் ஈழவேந்தன், தமிழ் இளைஞர் பேரவை கொழும்புக்கிளைத் தலைவர் இரகுபதி பாலசிறீதரன் ஆகியோர் இவற்றில் கருத்துரை வழங்கினர்.

## திரிசங்கு சொர்க்கத்தில் மலையகத் தமிழர் நிலை!

ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் (இராகலையைச் சேர்ந்த) இந்திய பிரசாவுரிமை பெற்றவரை மணந்த இலங்கை பெண்மணிகள் கணவனுடன் தாயகம் செல்ல முடியாதிருக்கின்றனர். இலங்கைப் பெண்மணிகளுக்கு இந்திய உயர் ஸ்தானிகர் விசா மறுத்துள்ளதாலேயே இப்படி அவர்கள் அவலநிலைக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். மனைவியை விட்டுப் பிரிந்து போக முடியாத நிலையில் கணவனின் செலாவாணிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம், வாசகால அனுமதிப் பத்திரம் ஆகியவை காலவதியாகி விட்டது. இதனைத் தொடர்ந்து தோட்ட நிர்வாகத்தினால் சம்பந்தப்பட்ட கணவன்—மனைவி ஆகிய இருவருக்கும், யாதொரு பரிசீலனையும் செய்யப்படாது வேலை நிறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய உயர் ஸ்தானிகரை இ.தொ. கழகம் வினவிய போது இலங்கைப் பிரசாவுரிமையை ரத்துச் செய்தல் நாட்டைவிட்டுப் போக கடவுச் சீட்டு வழங்குவதாக, இந்திய—உயர் ஸ்தானிகர் காரியாலயமும், பெற்றுக் கொண்ட பிரசாவுரிமையை ரத்து செய்ய முடியாதென இலங்கை குடியேற்ற வெளியேற்ற இலாகாவும் அறிவித்துள்ளனர். இப்படி இரு நாட்டு அரசாங்கங்களும் ஒரு தெளிவான நிலைக்கு வராததால் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் மிக்க கஷ்டத்துக்குள்ளாக்கப்பட்டிருப்பதுடன், வேலையுமற்றவர்களாக்கப் பட்டிருக்கின்றார்கள்.

இது தொடர்பாக கழகப் பொதுச் செயலாளரும் சட்டத்தரணியுமான திரு. மூ. பரராஜசிங்கம் இந்திய உயர் ஸ்தானிகர் அவர்களுக்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர் இந்தியா செல்லபோதிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடிதம் எழுதியுள்ளார்.

## செய்தித் தணிக்கை

அவசரகாலச் சட்டத்தின் 5ம் பிரிவின் கீழ் 1976 பெப்ரவரி 5ம் நாள் சிறீலங்காப் பிரதமரின் விதப்புரையின் மீது சிறீலங்கா குடியரசின் தலைவரினால்பிரகடனப்படுத்தப்பட்ட (பத்திரிகைத் தணிக்கைபற்றிய) ஒழுங்கு விதிகள் வருமாறு:—

(1) சிறீலங்காவின் அரசியலமைப்பின் 18 ஆம் பிரிவினால் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் மீளப் பெறும் அல்லது குறைக்கும் உத்தேசத்திட்டம் அல்லது விதப்புரை எதனையும்—

(2) சிறிலங்காவின் ஏதேனும் பாகத்தைத் தனியாகப் பிரிப்பதற்கான அல்லது அதன் ஆள்புல பூரணத்துவத்தை சிதைப்பதற்கான கிளர்ச்சி அல்லது இயக்கம் எதனையும்— (Any agitation or movement for the secession of any part of Sri Lanka or the disruption of the Territorial integrity thereof;)

(3) சாதி, மதப்பூசல்கள் தொடர்பான சம்பவம் எதனையும்—

பதிவுசெய்யும், விவரிக்கும், தகவல் கொடுக்கும் அல்லது விமர்சிக்கும் அல்லது—

சாதிமதப் பூசல்களை உண்டாக்கும், அல்லது சிறீலங்கா வாழ் குடிமக்களின் வெவ்வேறு பிரிவினர்களிடையே, அல்லது கூட்டத்தாரிடையே வெறுப் புணர்ச்சியை, அல்லது எதிர்ப்புணர்ச்சியை ஊக்குவிக்கும் அல்லது வளர்க்கும் சாத்தியமுடையதாயிருக்கும்—

நிழற்படம், படவிளக்கக் குறிப்பு, அல்லது வேறு விடயம் எதனையும்— அத்தகைய விடயத்தில் வெளியீடானது தகுதி வாய்ந்த அதிகாரியின் முன் அங்கீகாரத்தைப் பெற்றாலன்றியும் அது அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட வடிவத்தில் இருந்தால் தவிரவும்— செய்தித்தாள், சஞ்சிகை, மாத வெளியீடு, துண்டுப்பிரசுரம் அல்லது வேறு வெளியீடு எதனிலும் எவரும் வெளியிடுதலாகாது.

இவ்வொழுங்கு விதிகளின் கீழான ஏதேனும் தவறைப் புரிந்தவரெனச் சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றம்சாட்டப்பட்ட ஆள் எவரையும் சட்டத்துறைத் தலைமையதிபதியின் சம்மதத்துடனன்றி—பிணையில் விடுதல் ஆகாது.

வீட்டுத் தூய்மைக்குச் சிறந்த வழி!
இலையான், கொசு, நுளம்பு, பூச்சி,
புழு உபத்திரவம் நீங்க ஒரு வழி!

நீம் சுகாதார தூபம் பாவிப்பதே.

இன்றே பாவித்துப் பாருங்கள். ஒரு பைக்கற் 25 சதம் மட்டுமே.

மில்க்வைற் சவற்காரத்தொழிலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

சுதந்திரன்
SUTANTIRAN

## சுதந்திரன் திரட்டும் புத்தளம் உதவி நிதி!

அண்மையில் நடைபெற்ற புத்தளம் அசம்பாவிதங்களின் போது பாதிக்கப்பட்டோர்க்கு உதவவேண்டியது மனித மனம் படைத்த அனைவரதும் கடமையாகும். இதற்காக உதவி நிதியொன்றை ஆரம்பிக்க சுதந்திரன் முடிவுசெய்துள்ளது இதுசம்பந்தமாக தொடர்பு கொள்ளவிரும்புபவர்களும், நிதி அனுப்புவோரும் பின்வரும் முகவரிக்கு அனுப்பலாம்:-

ஆசிரியர்
சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயகா விதி
கொழும்பு-12

# "ஆளுங்கட்சியின் தவறுகளை கண்டிப்பது பத்திரிகைகளின் உரிமை!"

# இந்திய செய்தித் தணிக்கை முறைக்கு நீதிமன்றம் கண்டனம்!

அரசாங்கம் நியமித்த செய்தித் தணிக்கையாளர்கள் 'பத்திரிகைகளை பொது மக்களின் மனநிலையை மாற்றும் ஒரு கருவியாக' வற்புறுத்த முடியாது என பம்பாய் மேல்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

செய்தித் தணிக்கை தொடர்பான மேன்முறையீடு வழக்கில் தீர்ப்பளிக்கையிலேயே நீதிமன்றம் இதைத் தெரிவித்தது. தீர்ப்பு வழங்கிய இரு நீதிபதிகள். செய்தித்தணிக்கைச் சட்டத்தின் கீழ் செய்தித் தணிக்கையாளர் நியமனம், 'ஜனநாயகத்தைப்பேணி பாதுகாப்பதற்கு அன்றி அதற்கு சாவுகுழிவெட்டுவதற்காக அல்ல' என்றும் குறிப்பிட்டுள்ளனர். நீதிபதிகளின் தீர்ப்பு 250 பக்கங்களைக்கொண்டதாகும்.

''பிரீட்ம் ஃபெய்ட்'' என்னும் சஞ்சிகையில் வெளியிடப்பட்ட 11 கட்டுரைகள் மீது விதிக்கப்பட்ட தடையை ஆட்சேபிக்கும் மனுவை ஆதரித்து பம்பாய் நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பு வழங்கியிருந்தது. அத்தீர்ப்பை எதிர்த்து பம்பாய் அரசாங்கம் செய்த மேன்முறையீட்டை விசாரணை செய்த இரு நீதிபதிகளும் அந்த மேன்முறையீட்டை நிராகரித்து தீர்ப்பளித்தனர்.

அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டதை அடுத்து விதிக்கப்பட்ட கடும் செய்தித் தணிக்கையை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட முதலாவது மனு இதுவாகும். அரசாங்கத்தின் மேன்முறையீட்டை நிராகரித்து இரு நீதிபதிகளும் தமது தீர்ப்பில் கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்துள்ளனர்.

"பெரும்பான்மையினர் கொண்டிருக்கும் கருத்துக்களிலும் அபிப்பிராயங்களிலும் இருந்து வேறுபட்டிருப்பதும் விமரிசிப்பதும் அதிகாரத்திலுள்ள கட்சியின் நடவடிக்கைகளைக் கண்டிப்பதும் அரசியலுக்கு உகந்த சூழ்நிலையைத் தோற்றுவிக்கும். இந்த கருத்து வேறுபாடு அனுமதிக்கப்படக்கூடிய எல்லைகள் இருக்கின்றன. இதில் தணிக்கையாளரின் பங்கு மிக முக்கியமான தொன்றாகும். பொது மக்களின் வெறுப்பை அவரது கடமை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தாலும் அரசாங்கத்தின் ஆதரவைப் பெற முயலுவதன் மூலம் தணிக்கையாளர்கள் அதை ஈடு செய்யக்கூடாது. நீதியை அவர் கடைப்பிடிக்க வேண்டும்'' என நீதிபதிகள் கூறியுள்ளனர்.

# கழக ஆட்சியில் தமிழ் நாடு அடைந்த முன்னேற்றம்!

திமுகழக அரசுக்கு எதிராக கிளப்பி விடப்பட்ட 'ஊழல்' என்ற கூக்குரலின் பின்னால், கழக அரசு கடந்த ஒன்பதாண்டுகால ஆட்சியில் தமிழகத்தின் முன்னேற்றத்துக்கு ஆற்றிய பணிகள் மறைக்கப்பட்டு வருகிறது 1 47 முதல் 1967 வரை இருபதாண்டுகால காங்கிரஸ் ஆட்சியில் தமிழ்நாடு அடைந்த முன்னேற்றத்தைவிட, 1967 முதல் 1976 சனவரிவரை ஒன்பதாண்டு கழக அரசின்கீழ் தமிழ்நாடு அடைந்துள்ள முன்னேற்றம் பெருமைப்படத்தக்கது என்பதை பின்வரும்புள்ளி விபரங்கள் நிரூபிக்கின்றன:—

| விபரம் | 1967க்கு முன் (20 ஆண்டு காங்கிரசாட்சியில்) | 1967க்குப் பின் ஒன்பதாண்டு திமுக ஆட்சியில்) |
|---|---|---|
| நிலப்பட்டாபெற்றவர்கள் | 1.15 இலட்சம்பேர் | 3.80 இலட்சம் பேர் |
| மனைப்பட்டாபெற்றவர்கள் | 63,770 பேர் | 5,14,435 பேர் |
| குடியிருப்புமனை பெற்றவர்கள் | இல்லை | 1,75,195 பேர் |
| உச்சவரம்பால் உபரிநிலம் பெற்ற உழவர்கள் | இல்லை | 39,550 பேர் |
| அரிசனங்களுக்கு இலவச காங்கிரிட் வீடுகள் | இல்லை | 39,389 வீடுகள் |
| மின்விளக்கு வசதி பெற்ற ஊர்; | 20,250 | 41,087 |
| மின்விளக்கு வசதி பெற்ற அரிசனக்காலனிகள் | 4354 | 19,734 |
| மின் இணைப்பு பெற்ற பம்ப் செட்டுகள் | 2,89,903 | 4,59,420 |
| குடிநீர் வசதிக்கான செலவு | 18 கோடி ரூபா | 53 கோடி ரூபா |
| பாசன வசதி | 8 இலட்சம் ஏக்கர் | 16 இலட்சம் ஏக்கர் |
| அரிசி உற்பத்தி | (65-66ல்) 35 இலட்சம் டன் | (73-74ல்) 56 இலட்சம் டன் |
| புதிய கல்லூரிகள் | 92 | 91 |
| பயிலும் கல்லூரி மாணவர்கள் | 78,894 | 2,00,614 |
| புதிய மருத்துவமனைகள் | 576 | 269 |
| குடிசை மாற்றுவாரியம் | இல்லை | 31,654 குடியிருப்புகள் |
| மின் உற்பத்தி அளவு | 2,505 மில்லியன் யூனிட் | 5076 மில்லியன யூனிட் |
| பெரிய தொழிற்சாலைகள் | 703 | 446 (புதியவை) |
| நடுத்தர தொழிற்சாலைகள் | 30 | 242 |
| சிறிய தொழிற்சாலைகள் | 10,481 | 25,693 |
| தனிநபர் வருவாய் | | 67-68ல் ரூ:481/74-75ல் ரூ:742 |

இன்னும்—

பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் — கைரிக்ஷா ஒழிப்பு— அரசு ஊழியர் குடும்ப பாதுகாப்பு திட்டம்—கண்ணொளி வழங்கும் திட்டம்—கைம்பெண்களுக்கு மறுவாழ்வு—அனாதைச்சிறுர்களைப் பாதுகாக்கும் கருணை இல்லங்கள்—கலப்பு மணத்தை ஊக்குவிக்க செயல் திட்டங்கள்—மரமேறும் தொழிலாளர், மீனவர் குடும்பங்களுக்கு பாதுகாப்புத் திட்டங்கள்—காவல்துறையினர் திறமையை ஊக்குவிக்க முதலமைச்சர் பதக்கம், ஊதிய உயர்வு—அரசு அலுவலர்களுக்கு பலகோடி ரூபாய் செலவில் ஊதிய உயர்வுகள்—ரகசிய குறிப்பேட்டு முறை ஒழிப்பு—நெடுஞ்சாலைத் துறை தொழிலாளர்கட்கு இலவச காலணிகள்— மொழிப்போர் தியாகிகட்கும் சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கும் மாதந்தோறும் ஓய்வூதியம்—இத்தனைக்கும் மேலாக தாய் மொழியாம் தமிழ் எங்கும் எதிலும் இடம்பெற ஏற்றம் பெற எண்ணரிய திட்டங்கள் கழக ஆட்சியில் நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளன.

# 'தரப்படுத்தல்' முகமூடியை கிழித்தெறியும் கேள்விகள்!

## பண்டிதர் பேரவையில் கேட்பவர்!

பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதில் பின்பற்றப்படும் 'தரப்படுத்தல்'எனும் மூடுமந்திர முறையை அம்பலத்துக்கு கொண்டுவரக் கூடிய பின்வரும் கேள்விக்கணைகளை பண்டிதர் தேசிய அரசப்பேரவையில் கல்வியமைச்சரிடம் கேட்கவிருக்கிறார்!

(அ) 1975 ஆம் ஆண்டில் சிங்களம், தமிழ், ஆங்கிலத்தில் தேர்வு எழுதியவர்கள் பெற்ற புள்ளிகளைத் தரப்படுத்துதற்கு மொழிவாரியாகவும் பாடத்தொகுதிவாரியாகவும் எடுத்தளப்பட்ட நியமவிலகல்கள் எவை என்பதையும், ஒவ்வொரு மொழிவாரியாகவும் பாடத்தொகுதி வாரியாகவும் சராசரிப் புள்ளி என்ன என்பதையும் அவர் கூறுவாரா?

(ஆ) மொழிவாரியாகவும் பாடத்தொகுதி வாரியாகவும் தேர்வில் 30 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களில் எத்தனை பேர்களுடைய புள்ளிகள் தரப்படுத்தலால் குறைக்கப்பட்டன என்பதையும் எத்தனை பேருடைய புள்ளிகள் கூட்டப்பட்டன என்பதையும் அவர் கூறுவாரா?

## சுதந்திரன் புதிய சந்தா விபரம்

1976ம் ஆண்டு சனவரியிலிருந்து சுதந்திரன் புதிய சந்தா (உள்ளூர்) விபரம் வருமாறு:-

- ஓர் ஆண்டுக்கு— (புதன், ஞாயிறு இதழ்களுக்கு) ரூபா 50-00
- அரையாண்டுக்கு— ரூபா 25-00

சந்தாப்பணத்தை காசோலையாகவோ காசுக் கட்டளையாகவோ (நேரடியாக ரொக்கமாகவோ) செலுத்தலாம்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

நிர்வாகி
சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக வீதி
கொழும்பு-12

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு - 12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ இலக்கத்தில் 1976-ம் வருடம் பெப்ரவரி மாதம் 25-ம் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org